DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | ஆனந்தன் | Village | பூர்னிமானிகமிட்டா |
| Father's Name | கோபால் | Taluk | திருப்பத்தூர் |
| Age | 55 | Calling | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **07.03.2026**

**O.S. No. 112/2017** பி.வா.சா.**2** **11.17 AM – 12.30 PM**

**குறுக்கு விசாரணை (வாதிகள் தரப்பில் )–**

1. என்னுடைய கிராமம் பூர்னிமானிகமிட்டா மல்லப்பள்ளிக்கு அடுத்து சுமார் 5 கி/மீ தூரத்திற்கு உள்ளது என்றால் சரிதான். என்னுடைய கிராமத்தில் நான் எத்தனை வருடமாக வசித்து வருகிறேன் என்றால் பூர்விகமாக அங்க தான் வசித்து வருகிறேன். மேற்படி கிராமத்தில் எனக்கு நிலங்கள் உள்ளது என்றால் சரிதான், சுமார் 4 ½ ஏக்கர் நிலங்கள் உள்ளது. அனைத்து நிலங்களும் ஒரே சர்வே எண்ணில் உள்ளதா என்றால் இல்லை 2, 3 சர்வே எண்ணில் இருக்கும். மேற்படி நிலங்களுக்கான சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் என்னால் கூற முடியுமா என்றால் சர்வே எண் 2/6 ல் 66.5 ஏர்ஸ் இருக்கும், சர்வே எண்.12/1 ல் 40 ஏர்ஸ் இருக்கும். 2/2 ஏ ல் சுமார் 25 செண்ட் இருக்கும், 2/2 சி–யில் ½ ஏக்கர் இருக்கும்.

2. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்திற்கு உண்டான சங்கதிகளை யார் கூறியது என்றால் நானே தான் கூறினேன். வழக்கின் ஒன்று மற்றும் இரண்டாம் பிரதிவாதிகள் எனக்கு உறவினர்களா என்றால் இல்லை. தொழில் சம்பந்தமாகவோ அல்லது வேறு விதமாகவோ எங்களுக்குள் சம்பந்தம் உள்ளதா என்றால் ஆமாம் நிலம் வாங்கியதில் இருந்து தெரியும். மேற்படி நிலத்தை நான் முன்னின்று வாங்கிக் கொடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி நிலத்திற்கு உண்டான கிரைய பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்திருக்கிறேனா என்றால் இல்லை.

3. மேற்படி நிலம் மற்றும் வழக்கு சொத்திற்கு சம்பந்தமாக வழக்குகள் நடைபெற்றது என்றால் சரிதான். மேற்கூறிய வழக்குகளில் நான் ஏதாவது சாட்சி அளித்துள்ளேன் என்றால் இல்லை. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதியான வாதிகள் 0.17.5 எக்டேர் நிலத்தினை கிரயம் பெற்று அதன் பிறகு எந்த ஒரு ஆதரவான ஆவணங்கள் இல்லாமல் தவறான அளவினை குறிப்பிட்டு அதாவது 0.19.5 எனக் குறிப்பிட்டு அளவினை கூட்டி வழக்கு சொத்து குறித்து திருத்தல் பத்திரம் ஏற்படுத்தி உள்ள விவரம் குறித்து எனக்கு எவ்வாறு தெரியும் என்று

சொன்னால் மேற்படி 0.17.5 எக்டேர் சர்வே எண் 111/1டி மட்டும் தான் சரியானது பின்பு தயாரிக்கப்பட்டது போலியானது. மேற்படி 0.17.5 எக்டேர் நிலத்தை யாரிடமிருந்து கிரயம் வாங்கினார்கள் என்றால் கிருஷ்ணமூர்த்தி என்பவர் இடம் இருந்து வாங்கினார்கள்.

4. மேற்படி கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு எவ்வளவு சொத்து பாத்தியம் என்பதை நான் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் 0.17.5 எக்டேர் கிரயம் வாங்கிய பத்திரத்தை பார்த்து தெரிந்து கொண்டேன். நான் எப்போது அவர் தெரிந்து கொண்டேன் என்றால் வழக்கு தாக்கல் செய்தது குறித்து வக்கீல் என்னிடம் காண்பித்தார், அப்போது தான் பார்த்தேன். எனக்கு விவரம் நேரடியாக தெரியாது என்றாலும் வக்கீல் அலுவலகத்தில் வந்து வக்கீல் என்னிடம் காண்பித்த போது தான் எனக்கு தெரியும் என்றாலும் அதற்கு முன்பு எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

5. மேற்படி பத்திரத்தில் கிரயம் கொடுப்பவர் தனக்கு எவ்வளவு பாத்தியம் இருந்தது என குறிப்பு இருந்ததா என்று சொன்னால் 0.17.5 எக்டேர் இருந்ததாக குறிப்பு இருந்தது. மேற்படி கிரயம் கொடுத்தவரின் பெயரில் இருந்த பத்திரத்தை நான் பார்த்தேன் என்றால் பார்த்தேன் அதிலும் அவர் தான் இருந்தது. கிருஷ்ணமூர்த்தி யாரிடமிருந்து அந்த பத்திரத்தின் மூலம் கிரயம் பெற்றார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. எந்த வருடத்தில் அந்த பத்திரம் எழுதப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி 0.17.5 எக்டேர் நிலத்தை வாங்கிய கிரைய பத்திரத்திற்கு எத்தனை வருடத்திற்கு முன்பு அந்தக் கிரயப் பத்திரம் எழுதப்பட்டது என்றால் தெரியாது.

6. நான் எனது சாட்சியத்தில் கூறிய விவரங்கள் ஒன்று மற்றும் இரண்டாம் பிரதிவாதிகள் எதிர் வழக்குரையிலோ அல்லது அவர்கள் தரப்பு முதலாம் சாட்சியின் முதல் விசாரணை சாட்சியை தெரிவிக்கப்பட்டுள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியும். இரண்டாம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி என்பவரிடமிருந்து தான் கிரயம் வாங்கியதாக கூறியிருக்கிறார்களா என்றால் ஆமாம்.

7. வழக்கின் தரப்பினர்களுக்கு இடையே என்ன முன்விரோதம் என்று எனக்கு தெரியுமா என்றால் வழக்கு சொத்தை கிரையம் பெற்றதனால் விரோதம் ஏற்பட்டது. வழக்கு சொத்தின் சரியான செக்கு பந்து விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், சர்வே எண்.111/1டி 17.5 ஏர்ஸ் நிலத்திற்கு வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள், திருப்பத்தூர் வெலக்கல்நத்தம் ரோடிற்கு தெற்கு, வண்டி வழிக்கும் நடைபாதைக்கும் மேற்கு, கிருஷ்ணன் நிலத்திற்கு கிழக்கு, நாகராஜ் நிலத்திற்கு வடக்கு அதன் மத்தியில் 17.5 ஏர்ஸ். இந்த வழக்கானது எத்தனை ஏர்ஸ் நிலத்திற்கு

தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சாட்சி அதற்கு 17.5 ஏர்ஸ் நிலத்திற்கு போடப்பட்டுள்ளது என்றும் பின்பு திருத்தல் பத்திரம் மூலம் 19.5 ஏர்ஸ் நிலத்திற்கு என்று கூறுகிறார்.

8. வாதிகள் வாங்கிய நிலத்திற்கு கிழக்குப்புறமாக முதலில் கானை வழி வருகிறது அதற்கு கிழக்கில் வண்டி வழியும் வருகிறது என்று சரிதான். மேற்படி வண்டி வழியானது 1, 2 பிரதிவாதிகள் அவர்கள் நிலத்திற்கு சென்றுவர பயன்படுத்துகிற வழி என்றால் சரிதான். வாதிகளை நிலத்திற்கும் ஒன்று மற்றும் இரண்டு பிரதிவாதிகளின் வண்டி வழிக்கும் இடையில் பொதுவான கானை வழி உள்ளது என்றால் சரிதான். அது அனைவரும் பயன்படுத்தக்கூடிய பொது வழி தான் என்றால் சரிதான். சர்வே எண்.111/1 டி நிலத்திற்கும் ஒன்று இரண்டு பிரதிவாதிகள் பயன்படுத்தி வரும் வண்டி வழிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் அது வேறு வேறு நிலங்கள் என்றாலும் சரிதான்.

9. பிரதிவாதிகள் பயன்படுத்திய வரும் வண்டி வழிக்கும் வாதிகள் நிலத்திற்கும் இடையே ஊர் மக்கள் பயன்படுத்தி வரும் பொதுவான கானை வழி உள்ளதாலும் நான் கூறுவது போன்று வாதிகள் பிரதிவாதிகளின் வண்டி வழியை அபகரிக்க வேண்டும் என பத்திரம் ஏற்படுத்தி இருப்பது என்பது தவறாகும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் ஒன்று மற்றும் இரண்டு பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு எண் 15/2010 தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அது எனக்கு எப்படி தெரியும் என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொத்து உரிமையாளர்கள் கூறினார்கள் அதனால் எனக்கு தெரியும்.

10. மேற்படி வழக்கானது என்ன பரிகாரம் கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என எனக்கு தெரியுமா என்றால் தெரியும், வண்டி வழியானது வழக்கில் ஒன்று மட்டும் இரண்டாம் பிரதிவாதிகளுக்கு தான் சொந்தம் என 2015 ஆம் வருடம் சஞ்சீவி வகையறாவுக்கு ஆதரவாக தீர்ப்பாகிவிட்டது. மேற்படி வழக்கில் எந்தெந்த சர்வே எண் வழியாக மேற்படி வண்டி வழி செல்கிறது என கூறியிருக்கிறார்கள் என்றால் சரிதான்.

11.சாட்சியிடம் வா.சா.ஆ.7 ஆனது காண்பித்து கேள்வி கேட்கப்படுகிறது. அ.வ.எண்.15/2010 –ல் உள்ள தீர்ப்புரையில் 30–ஆம் பக்கத்தில் பத்தி 48–யை மேற்படி வழக்கின் வாதிகளின் வண்டி வழி எந்தெந்த சர்வே எண் வழியாக செல்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே பத்தி 48ல் தொடர்ச்சியாக "அதே நேரத்தில் வாதிகள் 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.111/1 டி நிலத்தில் எந்த உரிமையும் வழிபாத்தியமும் கோரயிலாது என்றும் இந்த நீதிமன்றம் தெளிவுப்படுத்துக்கிறது" என்ற சங்கதியை சாட்சி படித்து பார்த்து சரிதான்

என ஒப்புக்கொண்டார், சாட்சி மேலும் அந்த வழி வேறு இந்த வழக்கு சம்பந்தப்பட்ட நிலம் வேறு எனக் கூறுகிறார்.

12. சாட்சியிடம் புகைப்படத்தை காண்பித்து அதில் உள்ள பச்சை நிறத்தில் உள்ள வீடு ராஜா என்பவரின் வீடு என்றாலும், வெள்ளை நிறத்தில் உள்ள வீடு கனகசெட்டி வீடுக்கு மேற்காக வண்டி வழியும் அதற்கு மேற்கு புறமாக கானை வழி சொல்கிறது என்றால் சரிதான். **(மேற்படி புகைப்படமானது வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** கானை வழிக்கு மேற்கு தான் விஜயலட்சுமி நிலம் என்றால் சரிதான். சாட்சியிடம் சர்வே எண்.111/1டி –க்கு பெறப்பட்ட வில்லங்க சான்றிதழ் என்றால் சரிதான். **(சர்வே எண்.111/1டி –க்கு பெறப்பட்ட வில்லங்கசான்றிதழ் வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

13. 1ம் பிரதிவாதி பெற்ற தீர்ப்பின் அடிப்படையில் இன்று வரைக்கும் அந்த வண்டி வழியை அவர் பயன்படுத்தி வருகிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ.17 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள மேற்குப் புறமாக உள்ள வண்டி வழி ஒன்று இல்லை என்றாலும் அதனால்தான் வாதிக்கு சொந்தமான சர்வே எண் 111/1டி நிலத்தில் வண்டிவழி கோர முயற்சி செய்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவது போன்று வாதி நிலத்தில் ஒன்று மற்றும் இரண்டு பிரதிவாதிகள் வழியும் கோரவில்லை என்றாலும் வண்டி வழி அமைக்கவும் முயற்சி செய்யவில்லை என்றாலும் சரிதான், வண்டி வழி அமைக்க அவசியம் இல்லை.

14. அசல் வழக்கு எண். 15/2010 தீர்ப்பின் படி இன்று வரைக்கும் எந்த ஒரு நிரைவேற்று மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், இல்லாத வண்டி வழியை அந்த வழக்கில் தீர்ப்பின்படி பெற்றதை இன்று வரையும் அவர்கள் பயன்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல அந்த வழியை தான் பிரதிவாதிகள் பயன்படுத்தி வருகிறார்கள். 1, 2 பிரதிவாதிகள் இல்லாத ஒரு வண்டி வழியை வாதி நிலத்தில் அமைக்க முயற்சி செய்ததால் தான் நாட்றம்பள்ளி காவல் நிலையத்தில் ஒரு புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான் புகார் அளித்த பின்பு காவல் ஆய்வாளர் தீர்ப்பின்படி செயல்பட வேண்டும் என்றும் ஏற்கனவே வண்டி வழி கொடுக்கப்பட்டுள்ளது என கூறி அனுப்பினார்.

15. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 8 வது பத்தியில் 3,4 பிரதிவாதிகளின் துணையுடன் சென்ற 24.5.2017 வழக்கு சொத்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தார்கள் என்பது முற்றிலும் பொய்யானதாகும் என நான் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். 7 வது பத்தியில் 21.07.2016 என 2 வெவ்வேறு தேதிகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எந்த தேதியிலும் நாங்கள் அவ்வாறு முயற்சி செய்யவில்லை. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் கோரியுள்ளது போன்று எந்த வண்டி வழியினை சேதப்படுத்தினார்கள் அதை பிரதிவாதிகள் சரி

செய்வார்கள் என நான் கூறியிருக்கிறேன் என்றால் சஞ்சீவி பயன்படுத்திவரும் வண்டி வழியை தான் கூறினேன். தீர்ப்பின் படி பெறப்பட்ட வண்டி வழியை வாதிகள் வந்து சேதப்படுத்தினார்கள் என்றும் தொந்தரவு செய்தார்கள் என்றும் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை ஏதேனும் இந்த பிரதிவாதிகள் மேற்கொண்டு உள்ளார்களா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் ஏதேனும் புகார் அளித்தார்களா என்றால் இல்லை.

16. இந்த வழக்கை பற்றியோ வழக்கில் நடந்த பிரச்சனை குறித்தோ எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர் கூறியது போன்று முதல் விசாரணை சாட்சியத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் யாரிடமிருந்து கிரயம் பெற்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றாலும் நான் ஏதோ ஒரு கிருஷ்ணமூர்த்தி என்பவரிடமிருந்து வாங்கியதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மைக்கு முரணாக பிரதிவாதிகளுக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வாணியம்பாடி.